தேர்வு நிலைப் பேரூராட்சி அலுவலகம்
காரிமங்கலம் (தருமபுரி மாவட்டம்)

ந. க. எண். 260/2009/அ1 நாள் : 14.06.2010.

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் தேர்வு நிலைப் பேரூராட்சியில் அடியிற்காணும் வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காரிமங்கலம் தேர்வு நிலைப் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **01.07.2010**ம் தேதி **வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின்மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **01.07.2010**ம் தேதி **வியாழக்கிழமை பிற்பகல் 3.30** மணிக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் **30.06.2010**ம் தேதி **புதன்கிழமை பிற்பகல் 5.00 மணி** வரை அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேற்காணும் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தச்சட்டம் 1998 மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். ஏனைய விபரங்களை இவ்வலுலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010- 2011

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஷெட்யூல் படிவம் விலை ரூ. | செலுத்தப்பட வேண்டிய டேவணித் தொகை ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.7 மந்தை மாரியம்மன் கோவில் முதல் ராமகிருஷ்ணா கல்யாண மண்டபம் வரை மற்றும் 10வது வார்டு காந்தி பூங்கா வரை மற்றும் 2வது வார்டு மொரப்பூர் மெயின்ரோடு முதல் பெரியமிட்ட அள்ளி ஊர் வரை தார்சாலை அமைத்தல். | 11.00 | 3120/- | 22000/- | 90 நாட்கள் |
| 2. | வார்டு எண்.4 T.B பின்புறம் சமுதாய கூடம் கட்டுதல். | 15.00 | 3120/- | 30000/- | 150 நாட்கள் |
| 3. | வார்டு எண்.4 T.B பின்புறம் சிறுவர் விளையாடும் பூங்கா அமைத்தல். | 5.00 | 624 | 10000/- | 90 நாட்கள் |
| 4. | வார்டு எண்.1 சின்னமிட்ட அள்ளியில் அர்ஜுணன் வீடு முதல் பூதாள் வீடு வரை மற்றும் 3 குறுக்கு சந்துகளுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.25 | 312/- | 2500/- | 60 நாட்கள் |
| 5. | வார்டு எண்.3 ஆர்.எஸ்.வி. முருக்கம்பட்டியில் வேலு வீடு முதல் முனியப்பன் வீடு மற்றும் முருகேசன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.40 | 312/- | 2800/- | 60 நாட்கள் |
| 6. | வார்டு எண்.13 வியாபாரிக் கொட்டாயில் சின்னகொளந்தை நிலம் முதல் பாண்டியன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.80 | 312/- | 3600/- | 60 நாட்கள் |
| 7. | வார்டு எண்.15 காட்டுசீகல அள்ளியில் பெருமாள் வீடு முதல் சஞ்சீவிராமன் கோவில் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 2.00 | 312/- | 4000/- | 60 நாட்கள் |
| 8. | வாரச்சந்தையில் கடைமேடை, தடுப்புச் சுவர், கழிப்பிடம் கட்டுதல் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 10.00 | 1560/- | 20000/- | 90 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | வார்டு எண்.4 ஆதிதிராவிடர் சுடுகாட்டிற்கு நிழற்கூடம், சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2.50 | 624/– | 5000/– | 90 நாட்கள் |
| 10. | வார்டு எண்.3 காமராஜர் நகர் சுடுகாட்டிற்கு நிழற்கூடம், சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2.50 | 624/– | 5000/– | 90 நாட்கள் |
| 11. | வார்டு எண்.2 தேர்பேட்டை சபரி ஐயப்பன் பள்ளி முதல் ராஜா ஷாமில் வரை வடிகால் கட்டுதல். | 1.55 | 312/– | 3100/– | 60 நாட்கள் |
| 12. | வார்டு எண்.4 அண்ணாநகர் சாலையில் சாரதி வீடு முதல் நாராயணசாமி வீடு வரை இருபுறம் வடிகால் கட்டுதல். | 2.20 | 624/– | 4400/– | 60 நாட்கள் |
| 13. | வார்டு எண்.10 சௌடப்பசெட்டி தெருவில் சார்பதிவாளர் அலுவலகம் முதல் கலைமகள் கோச்சீங் சென்டர் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.30 | 312/– | 2600/– | 60 நாட்கள் |
| 14. | வார்டு எண்.14 எம்.ஜி.ஆர். நகர் கிருஷ்ணகிரி மெயின் ரோடு முதல் வசந்தன் வீடு மற்றும் முனிராஜ் வீடு வரை வடிகால் கட்டுதல். | 2.40 | 624/– | 4800/– | 60 நாட்கள் |

## நிபந்தனைகள்

1 ஒப்பந்தபுள்ளி அளிப்பவர்கள் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.

2 ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய எவ்வித வரி பாக்கியும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.

3 ஒப்பந்தபுள்ளி அளிப்பவர்கள் டேவணித் தொகையினை செலுத்தி ரசீதுடன் இணைத்து கொடுக்க வேண்டும்.

4 ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல் திருத்தல் இருக்கக்கூடாது.

5 டேவணித்தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6 உத்திரவு கிடைக்கப்பெற்றவுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை முடித்து கொடுக்க வேண்டும்.

7 வேலைகளை இளநிலைப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் பணி ஆய்வாளர் அவர்களின் மேற்பார்வையில் செய்ய வேண்டும்.

8 மதிப்பீட்டில் கண்டுள்ளபடி வேலை செய்ய வேண்டும். பணிக்கு தேவையான சிமெண்ட், இருப்பு கம்பிகள் மற்றும் தார் கியவை ஒப்பந்ததாரர்களே தங்கள் சொந்த செலவில் சப்ளை செய்து கொள்ள வேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளி முடிவு பேரூராட்சியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

10. வேலையை துவங்குவதற்கு முன்பு ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் செயல் அலுவலர் குறிப்பிடும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்த முச்சலிக்கா ஒன்று எழுதி கொடுக்க வேண்டும்.

11. குறிப்பிட்ட காலத்தில் பணியினை முடிக்காவிடில் கீழ்கண்டாவாறு அபராதம் விதிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 15 நாட்களுக்கு வரை | : | ஒப்பந்த மதிப்பில் 1% |
| 15 நாட்களுக்கு மேற்பட்டால் | : | ஒப்பந்த மதிப்பில் 3% |
| 30 நாட்களுக்கு மேற்பட்டால் | : | ஒப்பந்த மதிப்பில் 5% |
| 45 நாட்களுக்கு மேற்பட்டால் | : | ஒப்பந்ததாரர் பதிவு நீக்கம் செய்யப்படும். |

12. வேலை செய்து முடித்த பின்னர் பொறியியல் அலுவலர்கள் வேலையை பார்த்து அளவுகள் மற்றும் மேலளவுகள் எடுத்து பட்டியல் தயாாத்து அளித்தவுடன் விதிமுறைகளின்படி பிடித்தங்கள் செய்து தொகை வழங்கப்படும்.

13. வேலையை துவங்குவதற்கு முன்பு கட்டிட தொழிலாளர் நலநிதிக்கு மதிப்பீடு தொகையில் 0.3% வங்கி வரைவோலை எடுத்து ஒப்படைக்க வேண்டும்.

14. நகர்ப்புற உள்ளாட்சிகளது பொறியியல் கையேட்டில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றி வேலைகள் செய்யப்பட வேண்டும்.

(ஒம்) கே.வி.வீரம்மாள்
தலைவர்
காரிமங்கலம் பேரூராட்சி

(ஒம்)மு.கிருஷ்ணமூர்த்தி
செயல் அலுவலர்
காரிமங்கலம் பேரூராட்சி

**நகல்.**

1. பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், காரிமங்கலம் பேரூராட்சி.
2. அலுவலக விளம்பரப்பலகைக்கு.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. தலைவர், உபதலைவர், மன்ற உறுப்பினர்கள், காரிமங்கலம் பேரூராட்சி.
5. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், தருமபுரி மண்டலம்.
6. இளநிலைப்பொறியாளர், பேரூராட்சிகள், பாலக்கோடு.